ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. } DRP/OP/21/15/01

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2026.04.09

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

சகல பிரதேச செயலாளர்கள் ஊடாக
பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆ.ப..தி. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு

<u>பிறப்புச் சான்றிதழ் இல்லாத இலங்கைப் பிரஜைகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்.</u>

மேற்கூறிய விடயம் தொடர்பில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2023 க்குரிய தங்களுக்கு வழங்கப்பட்ட DRP/OP/01/DS/03 (වෙළුම IV) ஆம் இலக்கம் மற்றும் 2023.06.05ஆந் திகதிய , DRP/OP/10/15/03 ஆம் இலக்கம் 2023.06.05 மற்றும் 2024.04.09 ஆந் திகதிய கடிதங்களை இதன்மூலம் இரத்து செய்கிறேன்.

02. பிறப்புச்சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை அடையாள அட்டை பெற்றுக்கொள்ள முடியாத அஸ்வெசும பயனாளிகள் மற்றும் முதியோர் கொடுப்பனவை பெற இயலாத முதியோர் சமூகத்தினருக்கு உடனடியாக தேசிய அடையாள அட்டைகளை தயாரிப்பதற்கு ஏற்ற ஒரு முறைமையை உருவாக்க வேண்டும் என நலன்புரி நன்மைகள் சபை மற்றும் முதியோருக்கான தேசிய செயலகமும் கோரிக்கையை விடுத்துள்ளன.

03. அதன்படி, பிறப்புச் சான்றிதழ் இல்லாத இலங்கை பிரஜைகளுக்காக தேசிய அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2023இல் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் திருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட 01/2026 சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி, இதுவரை தேசிய அடையாள அட்டை பெற இயலாத, மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட, தங்கள் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் நபர்களால் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும் அத்தகைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதி 2026.12.31 என தயவாய் தெரிவித்துக்கொள்கிறேன்.

04. எனவே, பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த நபர்களுக்கு இது தொடர்பில் தெரிவித்து, 2026.12.31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் (ப.க)

பிரதிகள் :

01. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - தெ.கொ.
02. சகல மாவட்ட செயலாளர்கள் - தெ.கொ
03. கணக்காய்வாளர் நாயகம் - தெ.கொ
04. சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் (ஆ.ப.தி) - தெ.கொ மற்றும் அலுவலக பணிகுழாமிற்கு தெரியப்படுத்துவதற்கு

දුරකථන / தொலைபேசி / Telephone } (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail } info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web } www.drp.gov.lk